ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2222/31 - 2021 අප්‍රේල් මස 06 වැනි අඟහරුවාදා - 2021.04.06

*2222/31 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம்**

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய என்னால் ஒழுங்குபடுத்தப்பட்ட விதிமுறைகள்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2021, ஏப்பிறல் 06.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்கு விதிகள் "2021 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிமுறைகள்" என அழைக்கப்படுகின்றது.

2. இவ்வர்த்தமானப் பத்திரிகையில் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரான திகதியில் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் இறக்குமதி செய்வதற்காக பில் ஒப் என்ட்ரி (Bill of Entry) (சுங்க பிரகடனம்/சுங்க வெளிப்படுத்துகை) ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

3. திருத்தப்பட்ட, விசேட இறக்குமதி ஒழுங்குவிதிகள் பிரசுரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதிய 2044/40 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் உப அட்டவணை IV இல் குறிப்பிடப்பட்ட கீழ் காணப்படும் பொருட்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பான குறிப்புக்கள் இதன் மூலம் உள்ளடக்கப்படுகின்றது.

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>தடை(B) |
|---|---|---|---|---|---|
| 12 | 15.11 | | | **பாம்எண்ணெய்மற்றும்அதன்பகுதிகளும்,சுத்தமாக்கப்படாதவை அல்லது சுத்தமாக்கப்பட்டவை, எனினும் இரசாயன முறையில் மாற்றம் செய்யப்படாதவை.** | |
| | | 1511.10.00 | - | பாம் கச்சா எண்ணெய் | B |
| | | 1511.90.00 | - | பிற: | |
| | | 1511.90.20 | --- | 210 லீற்றர் மற்றும் அதற்குக் குறைவான பொதிகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பாம் எண்ணெய் | B |
| | | 1511.90.90 | --- | பிற சுத்தமாக்கப்பட்டவை வெளுக்கப்பட்டவை மற்றும் டியோடரைஸ்ட் (RBD) பாம் ஒலெய்ன் தவிர்ந்தவை | B |

4. திருத்தப்பட்ட, விசேட இறக்குமதி ஒழுங்குவிதிகள் பிரசுரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதிய 2044/40 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் உப அட்டவணை I இல் குறிப்பிடப்பட்ட கீழ்காணப்படும் பொருட்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பான குறிப்புக்கள் இதன் மூலம் உள்ளடக்கப்படுகின்றது.

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>இறக்குமதி<br>கட்டுப்பாட்டு<br>உரிமம் (L) |
|---|---|---|---|---|---|
| 250 | 15.11 | | | **பாம் எண்ணெய் மற்றும் அதன் பகுதிகளும், சுத்தமாக்கப் படாதவை அல்லது சுத்தமாக்கப்பட்டவை, எனினும் இரசாயன முறையில் மாற்றம் செய்யப்படாதவை.** | |
| | | 1511.90.00 | - | பிற: | |
| | | 1511.90.10 | --- | உள்ளக வெப்பநிலையில் தொடர் பிரிவுகள் (பாம் ஸ்ரியரின்) | L |
| | | 1511.90.30 | --- | செம்மை செய்யப்படாத பாம் ஒலெய்ன் | L |
| | | 1511.90.90 | --- | பிற (சுத்தமாக்கப்பட்டவை வெளுக்கப்பட்டவை மற்றும் டியோடரைஸ்ட் (RBD) பாம் ஒலெய்ன் மட்டும்) | L |

5. திருத்தப்பட்ட, 2020 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் பிரசுரிக்கப்பட்ட 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதிய 2184 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் உப அட்டவணை II இல் குறிப்பிடப்பட்ட கீழ் காணப்படும் பொருட்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பான குறிப்புக்கள் இதன் மூலம் நீக்கப்படுகின்றது.

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>கடன் அடிப்படை<br>(C) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 90<br>நாட்கள் | 180<br>நாட்கள் |
| 11 | 15.11 | | | **பாம் எண்ணெய் மற்றும் அதன் பகுதிகளும், சுத்தமாக் கப்படாதவை அல்லது சுத்தமாக்கப்பட்டவை, எனினும் இரசாயன முறையில் மாற்றம் செய்யப்படாதவை.** | | |
| | | 1511.10.00 | - | பாம் எண்ணெய் | | C |

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br><br>விபரம் | நிரல் IV<br>கடன் அடிப்படை<br>(C)<br>90<br>நாட்கள் | <br><br><br>180<br>நாட்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | 1511.90.00 | - | பிற: | | |
| | | 1511.90.20 | --- | 210 லீற்றர் மற்றும் அதற்குக் குறைவான பொதிகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பாம் எண்ணெய் | | C |
| | | | | | | |

6. கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதியானது 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதிய இலக்கம் 2044/40 கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் ஒழுங்குவிதி இலக்கம் 05 என உட்படுத்தப்பட்டுள்ளது.

5. இவ்வொழுங்கு விதிகளின் நோக்கத்தினை நிறைவேற்றுவதனை முன்னிட்டு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் வணிக வங்கிகளுக்கு செயற்பாட்டு ஆலோசனை வழங்கப்பட வேண்டும்.

7. பின்வரும் பொருட்களுக்கு செலுத்தப்பட வேண்டிய, இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமக் கட்டணம், தொடர்ந்து திருத்தப்பட்டவாறான 2016, பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதிய 1953/28 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விஷேட இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டு உரிமக் கட்டண அட்டவணை I இற்கு உட்சேர்க்கப்படுதல் வேண்டும்.

| தொடர் இல. | விடயம் | இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமக் கட்டணம் |
|---|---|---|
| 62 | பாம் எண்ணெய் | CIF பெறுமதியில் 0.4% |

8. இந்த ஒழுங்குவிதிகள் 2021, ஏப்பிறல் 07 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.